## போத்தனூர் குலம், தமிழ் நாட்டுக்கு வந்த வரலாறு.

வடக்கு உத்திப் பெல்லாறியில் தொட்டி நாயுடுவுக்கு போத்தனூர் குலத்துக்காரன் சேவகம் செய்து வந்தான். தொட்டி நாயுடு வீட்டில் கல்யாணம் நடந்தால், அந்த மாப்பிள்ளைக்கு வேஷ்டி சட்டை இவைகள் அணிந்து, அலங்காரம் செய்து, மாப்பிள்ளையை குதிரைமேல் வைத்து, லகானை பிடித்து, ஊர் வலம் கொண்டு வருவான். இப்படியாக தொட்டி நாயுடுவுக்கு போத்தனூர் குல மாதாரிகள் பல வேலைகள் செய்து வந்தனர்.

இப்படியிருக்கும் போது, தொட்டி நாயுடு தமிழ் நாட்டுக்கு புறப்பட்டு வந்தார் இவருடன் எதுப்பனூர் குலத்துக்காரன் புறப்பட்டு வந்தான் இவனுக்கு இரண்டு மனைவிகள். மறுபடி ஒரு நாயுடுவுடன் போத்தனூர் குல மாதாரி புறப்பட்டு வந்தான். மறுபடி ஒரு நாயுடுவுடன் சோழனூர் குல மாதாரி புறப்பட்டு வந்தான் இப்படியாக மூன்று குல மாதாரிகளும் தமிழ் நாடு வந்தனர்.

இவர்களிலிருந்து, மற்ற குலங்கள் பிரிந்தது.

### தலையூர் நாடு

| | | | |
|---|---|---|---|
| A | எதுப்பனூர் | பகடை | வேரப்பட்டி. |
| C | சோழனூர் | மணியம் வேலன். | பாகநத்தம். |
| B | போத்தனூர் | கப்பிலியன் | சோதிவடம் |
| D | தீட்டனூர் | கோடங்கிக்காரன் | வெங்கக்கல் பட்டி |

1;

சோழனூர் கோவிலில் விஷேசம் நடந்தால், அவர்கள் பெண்களை கொடுத்த மாமன், மைத்துனர் வீட்டில், மேற் சொன்ன சோழனூர்கள் சென்று, கோவில் வரி வீட்டுக்கு ஒரு ரூபாய் வாங்கி வருவார்கள். அதற்கு இவர்கள் பெண்மக்களுக்கெல்லாம் பச்சை அரிசி ஒரு படி, பொங்கல் வைக்க பானை ஒன்று, பூஜைக்கு தேங்காய் பழம் கொடுப்பது வழக்கம்.

மணியகாரன் --- சோழனூர் குலம் -- சின்ன குளத்துபட்டி

பகடை ---- A. எதுப்பனூர் குலம் .. சிலநாயக்கன்பட்டி

கோலுக்காரன் .... A. ககுமனூர் குலம்.

கப்பிலி ---- A தீட்டனூர் குலம்.

1. சோழனூர்
2. கேமினூர்
3. தீட்டனூர்
4. ககுமனூர்
5. கொம்மினூர்
6. காமனூர்
7. எதுப்பனூர்
8. போத்தனூர்
9. சூணினூர்

Annappen Mathari Kulams

All As are aNNan/tambi, as are all Bs, but A, B and C groups are maman/machan to one another with the exception of the anomaly of the accompanying story.

A 1, சோழனூர்.

A 2, கேமினூர்.

A, 3, கொம்மினூர்.

A-4, காமனூர்.

B 1, எதுப்பனூர்.

B 2, தீட்டனூர்.

B 3, கசமனூர்.

B 4, சூனினூர்.

C 1, போத்தனூர் — Has become aNNan/tambi to A 1 (see accompanying story) but not to the rest of the A group.

குமரச் சொன்ன, சில குல தெய்வங்கள்.

01, கேமினூர் — பொன்னர். சங்கர். வீரமலை

2, தீட்டனூர் — மதுரை வீரன். அங்காயியம்மன் / பளையபாளையம்

நாமக்கல்லிலிருந்து கிழக்கு சுமார், 4 மைல்

03, சோழனூர் — சந்தனக்கருப்பணன், பாலதேவதை / சின்னக்குளத்துப்பட்டி

கரூருக்கு தெற்கு

4, கசமனூர் — மதுரை வீரன் அங்காயி. மாசிக்கருப்பு

மேற்கண்ட பளையபாளையம்

1,

கீழ்கண்ட மாதாரிகள் குலதெய்வம், பெயர்.

1, கொம்மினர் — குங்கும மலையாளக் கருப்பு.

வெள்ளிரிப்பட்டி, பசுபதி பாளையம்.
கரூருக்கு தெற்கு

---

௨, எதுப்பனர் — மதுரைமீனாக்ஷியம்மன். வீரமாத்தி.

கருர்To கோடங்கிபட்டி
தெற்கு ௩ மைல் தூரம்

---

௩, சூணினன் — அங்காயி அம்மன். மதுரைவீரன்.

புளிய பாளையம்

---

4, காமனர் — பட்டத்தலைச்சி. மதுரை வீரன்.

கிட்டாம்பூர்.

கரூருக்கு தெற்கு அரவக்குறிச்சி ரோடு
9 மைல்.

---

1,

## போத்தனூர் குல,மாதாரிகளுக்கு ஏற்பட்ட குலதெய்வம்.

0.1, போத்தனூர் — மாமுண்டி.வக்கய்யன். பெரிய சாமி.

இதற்க் கெல்லாம் ஒரே பெயர், ஆண்டவனூர்.

மணப்பாறைக்கு வலதுபுரம் கோவில் உள்ளது

இதற்க்கு ஏற்பட்ட மற்ற காணியாளர்கள்

2. கம்பளத்து நாயக்கன்
3. நாட்டுக்கோட்டை செட்டியார்
4. முதலியார் (மேளகாரர்)
5. ரெட்டியார்
6. மூப்பனூர்
7. சோளி வண்ணான்
8. பறையன்

மேற்சொன்ன ஆண்டவனூரின், வரலாறு.

கம்பளத்து நாயக்கர் குலத்தில், நல்லேந்திரர் என்று ஒருவர் இருந்தார். தெய்வபக்தியுள்ளர். அப்படியிருந்த அவர் வயது ஆகி இறந்து விட்டார். இறந்து சில நாள் கழித்து, அவர் குலத்தாரிடம் கனவில் தோன்றி —

"அப்பா! என்னை ஒரு தெய்வமாக வைத்து, வருஷா வருஷம் எனக்கு திருவிழாக் கொண்டு நடத்தி வாருங்கள்" என்றார். அதற்கு அவர் "சரி! உங்களை அப்படியே வைத்துக் கொண்டாடுகிறோம்; ஆனால், இங்கு மழையில்லாமல் இருக்கிறது, உடனடியாக மழை பெய்தால் உன்னை வைத்துக் கொண்டாடுகிறோம்" என்றார். உடனே நல்லேந்திரர் அருளால் மழை பெய்தது. மறுபடி அவரைச் சேர்ந்த குலத்தாளிகள் எல்லோரும் சேர்ந்து கோவில் கட்டி ஆண்டவர் என்ற பெயருடன் அக்கோவிலுக்கு இன்றும் வருஷா வருஷம் விழாக் கொண்டாடி வருகிறார்கள்.

Story of why two Kulams have become aNNan/tambi
1... Sandanam Mathai (Annappu subcaste) Kaum 24/2/66

அனுப்பர் குலம் எட்டு. இந்த எட்டு குலங்களில் சோழனார் என்ற குலத்துக்காரன் மற்ற ஏழு குலத்தில் ஆறு குலத்தில் கல்யாணம் செய்வான் ஏழாவது குலமான போத்தினார் குலத்தில் கல்யாணம் செய்வதில்லை இதற்கு காரணம்.

முன்காலத்தில் மேற்சொன்ன போத்தினார் குலத்தில் ஒரு பெண் இருந்தது; அந்தப் பெண்ணை மற்ற ஏழு குலத்துக்காரனும் ஒவ்வொருவராக வந்து பெண் எனக்குக் கொடு என்று பரியம் செலுத்திவிட்டுப் போனார்கள். இப்படி மற்ற ஏழு குலத்தாரிடமும் பெண் கொடுப்பதாகச் சொல்லி பரியப்பணம் வாங்கி செலவு செய்து விட்டான் போத்தினார் குலத்துக்காரன். கடைசியில் ஏழு குலத்துக்காரனும் வந்து பெண் கேட்டார்கள். அப்போது போத்தினார் குலத்துக்காரன் அவர்களிடம் "என்னிடம் ஒரு பெண்தான் இருக்கிறது ஏழு பேருக்கும் எப்படி பெண் கொடுப்பது; ஆகையால், நான் என் பெண்ணை ஒரு மரப் பெட்டி செய்து, அந்தப் பெட்டியில் பெண்ணை வைத்து ஆற்றில் மிதக்க விடுகிறேன் தைரிய முள்ளவன்

ஆற்றில் இறங்கி, பெண்ணை எடுத்து வந்து
கல்யாணம் செய்து கொள்ளுங்கள்" என்று
மேற் சொன்னபடி பெட்டி செய்து பெண்ணை
ஆற்றில் மிதக்க விட்டான். அப்போது சோழி
ஞர் குலத்துக்காரன் ஆற்றில் குதித்து
பெட்டியை எடுத்து வந்து மேட்டில் வைத்
து பெட்டியை திறந்தான். அப்போது பெட்டி
யின் உள்ளே இருந்த பெண் திடீரென்று
எழுந்து சோழிகுலத்தானை "அப்பா!" என்று
கட்டிப்பிடித்ததனால் இப்போது இந்த சோழி
குலத்தான் போத்தினர் பெண்ணை கல்யாணம்
செய்வதில்லை யென்றும் சோழினர் வீட்டில்
குழந்தை பிறந்தால் அந்த தாய் பறையன் முகத்
தில் புண்ணியாசனம் செய்யும் வரை விழிக்கக்
கூடாதாம் மேலும் போத்தினர் பெண்ணின் சாப
காரத்தமாக இன்றும் சோழினர் குலத்தில் குழந்
தை பிறந்தால் புண்ணியாசனமன்று சமையல்
செய்து 3 படப்பு சாதம் படைத்து கும்பிடுவார்
களாம். இதை வாழ தெய்வம் கும்பிடுவது
என்று சொல்வார்கள்.

Pandaram Caste (Gannapathi Pandaram, Kangayampalayam or Vellakoil) 14, 2, 66

1,

## பண்டாரம், குலம்.

முன்னர் சிவபெருமானின் கையிலுள்ள அக்கினியை அம்மையின் உபசாரத்திற்காக தந்தருளிய மகளுக்குத்தான் (ஆண்டீ) என்பது, ஆண்டியென்று வழங்கலாயிற்று. அம்மையின் பொக்கிஷமாகிய பண்டாரத்திற்கு தலைமையாய் இருந்து காத்த காரணத்தால், பண்டாரம்! என்று வழங்கலாயிற்று தவிர பண்டாரம் என்பது மடாதிபதியினத்தான் என்றதால் மடாதிபதி என்ற பெயரும் உண்டு. இவனுல் தொழில் தந்து வாழ்வதால் சிவகோத்திரம் என்ற பெயரும் உண்டு. ஆச்சர், குலம்-என்றும். கோவர் என்ற குலப்பெயரும் உண்டு.

மேற்படி பண்டாரங்களுக்கு ஏற்பட்ட குலதெய்வம் பராசக்தி தான். பிற்காலம் இவர்களுக்கு நாடுபிரிந்த காரணத்தால், அந்தந்த நாட்டுத் தெய்வங்களை குல தெய்வமாக கொண்டாடி வருகிறார்கள்

### குறிப்பு:

அம்மையின் பொக்கிஷம் என்பது, அம்மையின் ஆபரணங்கள், நகைகள் இருக்கும் இடம்